கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திருமதி.செ.கலைவாணி,எம்.எஸ்சி.,(விவ.,)

செ.மு.ஆ.எண்.அ2/1769/2019 நாள்: 06 .11.2019

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி – தட்டச்சர்கள் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு வேளாண்மைத்துறையில் பணிநியமனம் செய்து உத்தரவிடப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடித எண்: 1012/PSD-G2/2019, நாள்: 20.02.2019.
2. சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (ப.மே) அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி3/7551/2019, நாள் 01.03.2019.
3. கிருஷ்ணகிரி, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்: அ2/1769/2019, நாள்: 07.03.2019.
4. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்: அபபி3/23567/2019, நாள்: 04.11.2019.
5. வேளாண்மை இயக்குநர், சென்னை அலுவலக தொலைபேசி செய்தி நாள்: 05.11.2019.

******

ஆணை:

பார்வை 2-ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (ப.மே) அவர்களின் செயல்முறை ஆணையின்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ஆம் ஆண்டு தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி பணிநியமனம் வழங்கப்பட்ட தட்டச்சர்கள் பார்வை 1 மற்றும் 5-ல் கண்டுள்ள கடிதங்களில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்குட்பட்டு பணியில் சேர்ந்த நாள்முதல் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தேர்வு பட்டியலில் வரிசை எண் | பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பிறந்த தேதி | முதன் முதலாக பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 14 | பி.கலைச்செல்வி, தட்டச்சர் | 25.10.1990 | 11.03.2019 மு.ப | 11.03.2019 மு.ப |
| 2 | 22 | எஸ்.தீபா, தட்டச்சர் | 13.03.1991 | 11.03.2019 மு.ப | 11.03.2019 மு.ப |
| 3 | 51 | டி.அறிவழகன், தட்டச்சர் | 07.06.1995 | 11.03.2019 மு.ப | 11.03.2019 மு.ப |
| 4 | 283 | ஆர்.ராஜகணேசன், தட்டச்சர் | 10.07.1989 | 11.03.2019 மு.ப | 11.03.2019 மு.ப |
| 5 | 282 | ஆர்.சுப்ரமணி, தட்டச்சர் | 10.05.1981 | 12.03.2019 மு.ப | 12.03.2019 மு.ப |
| 6 | 318 | மு.முகமது சுலைமான், தட்டச்சர் | 12.04.1990 | 13.03.2019 மு.ப | 13.03.2019 மு.ப |
| 7 | 305 | மு.த.ரங்கசாமி, தட்டச்சர் | 20.06.1989 | 14.03.2019 மு.ப | 14.03.2019 மு.ப |
| 8 | 267 | எம்.நேரு, தட்டச்சர் | 23.05.1977 | 15.03.2019 மு.ப | 15.03.2019 மு.ப |
| 9 | 61 | ஆர்.விஜயகுமார், தட்டச்சர் | 28.05.1988 | 31.05.2019 பி.ப | 31.05.2019 பி.ப |

இதனைத் தொடர்ந்து இவர்களை பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவத்தில் வைத்து மூன்றாண்டுகள் தொடர்ச்சியான பணிக்காலத்தில், இரண்டாண்டு பணிக்காலத்தினை முடிக்க அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இப்பணிவரன்முறை ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வுகள்-IV 2015-16, 2016-17 மற்றும் 2017-18ஆம் ஆண்டு மூலம் தேர்வு செய்யப்பட்ட மேற்குறித்த நபர்களின் பணிவரன்முறை சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் முடிவின் தன்மைக்கு உட்பட்டதாகும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பணியாளர்கள் அரசாணை எண்:43 (நிர்வாகம் மற்றும் சீர்த்திருத்த) (S)துறை, நாள்: 17.04.2009-ல் வழங்கியுள்ள உத்திரவுகளின்படி மேற்காணும் பணியாளர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் கணிணி பயிற்சி Certificate Course in Computer on Office Automation தொழில் நுட்ப கல்வி இயக்குநரால் நடத்தப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். மேலும், தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிட்ட பின்னரே தட்டச்சர் பதவியில் இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராகிறார் எனவும் இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

ஓம்/-செ.கலைவாணி,
வேளாண்மை இணை இயக்குநர்,
கிருஷ்ணகிரி

பெறுநர்:

மேற்காணும் பணியாளர்கள்.

நகல்: சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு தகவலின்பொருட்டு பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.(அநிபி 5-பிரிவு).

வழி/நகல்: வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகம் (உழவர் பயிற்சி நிலையம்), கிருஷ்ணகிரி.

வழி/நகல்: வேளாண்மை உதவி இயக்குநர், மத்தூர்/ ஊத்தங்கரை/ சூளகிரி / கெலமங்கலம் / ஒசூர் /தளி.

நகல்: இவ்வலுவலக ஆ2-பிரிவிற்கு.

நகல்: பணிப்பதிவேடுகளுக்கு.

நகல்: இருப்புக்கோப்பு.

உபரி – 2.

/ உத்தரவுப்படி/

6/11/19

ஆட்சி அலுவலர்

6/11/19